
# அவர்கள் ஜெயங்கொள்ளும் ஒவ்வொரு முறையும், அவர்களுக்கு ஒரு புதிய நாமம் கொடுக்கப்பட்டது



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

26. அவர் என்ன செய்யப் போகிறார் என்பதை காண்பிக்கும்படி, அவர் 17ம் அதிகாரத்தில் அவனுடைய பெயரை மாற்றினார். மேலும் சாராளுடைய பெயரையும் மாற்றினார். அது சரியே. அந்தப் பெயர்களைக் கவனித்துப் பாருங்கள், அது ஏதோவொன்றை அர்த்தப்படுத்துகிறது. அவர் ஏன் யாக்கோபுடைய பெயரை இஸ்ரவேல் என்று மாற்றினார்? அவர் ஏன் சவுலுடைய பெயரை பவுல் என்று மாற்றினார். அவர் ஏன் அந்தக் காரியங்கள் எல்லாவற்றையும் செய்தார்? அவர் ஜெயங்கொண்டு, மகிமைக்குள் பிரவேசித்த பிறகு, தம்முடைய பெயரை மாற்றிக் கொண்டதாக, அவர் கூறினார். வெளிப்படுத்தின விசேஷத்தில், ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு ஒரு வாக்குத்தத்தம் அளிக்கப்பட்டிருக்கிறது, அவர் தம்முடைய புதிய நாமத்தை அறியப்பண்ணுவதாக. அது சரியே. அவர்கள் ஜெயங்கொள்ளும் ஒவ்வொரு முறையும், அவர்களுக்கு ஒரு புதிய நாமம் கொடுக்கப்பட்டது.

**ஆபிரகாம், அவன் முடிவில் ஜெயங்கொண்ட போது, ஆபிராம் என்ற பெயரானது அவனை விட்டு எடுக்கப்பட்டு, "நீ இனி ஆபிராம் என்று அழைக்கப்பட மாட்டாய், ஆனால் ஆபிரகாம் என்று அழைக்கப்படுவாய்" என்று கூறினார். அவனுக்குத் தம்முடைய நாமத்தில் (ஒரு) பாகத்தைக் கொடுத்து, அவருடைய நாமத்தை அதில் பொருத்திக் கொண்டார்**: **ஏலோ-கிம்** (Elo-him). **ஹி-ம்** (H-i-m) மற்றும் **ஹா-ம்** (h-a-m): **ஏலோகிம்**. **வேறு வார்த்தைகளில் கூறினால், நான் சகலத்திற்கும் பிதாவாக இருக்கிறேன்.** புரிகிறதா? **நான் உன்னையோ தேசங்களுக்குப் பிதாவாக ஆக்குகிறேன்**, **எனவே நான் மாற்றிவிட்டு, என்னுடைய நாமத்தில் (ஒரு) பகுதியை உனக்குக் கொடுத்திருக்கிறேன்**, **தேசங்களுக்குப் பிதா, ஹா-ம்** (h-a-m). புரிகிறதா? ஏலோ-கிம், ஆபிரகாம்... அது ஒரு நல்ல சொற்றொடராக உள்ளது, நீங்கள் எப்பொழுதாவது அதைப் பற்றி சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா? இன்றைக்கு

கிரகாம் என்று அழைக்கப்படும் ஒரு மகத்தான சுவிசேஷகர் இருக்கிறார், கி-ர-ஹா-ம் (G-r-a-h-a-m), பில்லி கிரகாம், அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள், தேவன் எப்படியாக தம்முடைய இரக்கத்தில், அவர் எப்படியாக முன்னறிந் திருக்கிறார், அவர் செய்கிற காரியங்கள்.

இப்பொழுது, அவர் அங்கே என்ன செய்தார் என்பதைக் கவனியுங்கள், **அவர் சாராயை சாராள் என்று மாற்றினார்.** சாராயின் பெயரை, சாராய் என்பதிலிருந்து சாராள் என்று மாற்றினார். "**சாராள்" என்பதற்கு "இராஜகுமாரத்தி (*princess* - அரசிளங்குமாரி, இளவரசி, இராஜாவின் குமாரத்தி)" என்று அர்த்தம் இருப்பதைக் கவனியுங்கள். அவன் தேசங்களுக்கு பிதாவாக இருந்தான்.** ஓ, அது அழகாயில்லையா? **அந்த வயதான மனிதனுக்கும், வயதான பெண்ணுக்கும், இப்பொழுது நூறு வயது, அந்த வாக்குத் தத்தமானது நிறைவேறப் போகிறது**.

★★★★★

(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)